
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 07 JULY-2023

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-




# மூன்று நாளில் நடப்பது என்ன

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அவர் உன் தலையை நசுக்குவார் என்ற வார்த்தையின்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசின் தலையை நசுக்கி நம்மை உயிரோடு காத்தார். இந்த உலகத்தில் நமக்கு விரோதமாக எத்தனை சதி மோசம் வந்தாலும், அவருடைய பிள்ளைகளை அவர் கைவிடாமல் காத்து நடத்தி வருகிறார். வானத்தின் வாசலில் நடைபெறும் ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். குறிப்பாக ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடைபெறும் உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து, அற்புதங்களைச் செய்து வருகிறார். வானத்தின் வாசல் ஜெபமையம் ஒரு எழுப்புதலின் மையமாக மாற ஜெபித்துக் கொள்ளுங்கள். நமது மீடியா ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். திங்கள் முதல் வெள்ளி வரை **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** என்ற நிகழ்ச்சியும், தினமும் காலையில் **இயேசுவை தினம் பார்ப்போம்** என்ற நிகழ்ச்சியும், மாதத்தின் கடைசி நாளில் **நம்பிக்கையின் இரவு** என்ற நிகழ்ச்சியும் ஆசீர்வாதமாக ஒளிபரப்பாக தேவன் கிருபை செய்கிறார். மேலும் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமையில் **மதுரை எழுப்புதல் உபவாச ஜெபம்** சிறப்பாக நடைபெற்று வருகிறது. தொடர்ந்து ஒவ்வொரு காரியங்களிலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். **இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கை** ஊழியத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், இன்னும் கர்த்தருடைய நாமத்தை இந்த ஊழியத்தின் மூலம் மகிமைப்படுத்தவும் ஜெபியுங்கள். உங்கள் மேலான ஜெபத்தாலும், காணிக்கைகளினாலும் இந்த ஊழியத்தை தாங்க மறவாதிருங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincent Raj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)




# மூன்று நாளில் நடப்பது என்ன

மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி உன்னை மறுபடியும் உன் நிலையில் உயர்த்துவார். ஆதி 40:13

சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வேதாகமத்தில் நாட்கள், எண்கள் இவைகளைப் பற்றியும், சில முக்கிய நாட்களைப் பற்றிப் பார்க்கிறோம். நாற்பது நாட்கள், ஏழு நாட்கள், மூன்று நாட்கள் என்று சொல்லப்பட்டுள்ளது, அதிலே இந்த மூன்று நாட்களைப் பற்றித் தான் இப்பொழுது நாம் பார்க்கப் போகிறோம். நம்முடைய தேவன் திரித்துவ தேவனாய் இருக்கிறார். எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர். அவர் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார். மத் 28:19-ல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற தம்முடைய நாமத்தை அங்கே சொல்லுகிறார். மேலும் 1 யோவான் 5:7-லும் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்றார். அப்படி திரித்துவ தேவனாயிருக்கிறவர் இன்றைக்கு நமக்குள் இருக்கின்ற ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று அமைப்பின் மூலமாக செயல்படுகிறார். இந்த மூன்று என்பது முக்கியமானது. இயேசு செய்த முதல் அற்புதம் யோவான் 2:1-ல் நடந்த கல்யாணம். அங்கு இயேசு செய்த அற்புதம் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார். அதுமட்டுமா இயேசு

சொன்னார் மத் 16:21-ல் மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்றார். இதுதான் நான் இந்த பூமிக்குக் கொடுக்கும் அடையாளம் என்றார். வேதபாரகர்கள், பரிசேயர்கள் நீர் யார்? எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டு என்ற போது இயேசு சொன்னார் மத் 12:40-ல் யோனா இரவும் பகலும் மூன்று நாள், ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும், பகலும் மூன்று நாள் பூமியின் வயிற்றில், பூமியின் இருதயத்தில் இருப்பார் என்றார். இப்படி பல சம்பவங்கள் இந்த மூன்று நாளிலே நடந்ததைப் பற்றி வேதம் சொல்லுகிறது. இதைப் போல பல சம்பவங்களை பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பார்க்கிறோம். இப்படி மூன்று நாட்களில் நடந்த அற்புதங்களை, நன்மைகளைத்தான் நாம் பார்க்கப் போகிறோம். யோசேப்பு சிறையில் இருக்கும் போது பார்வோனுடைய அரண்மனையிலே இருந்த இரண்டு பேர் ராஜாவின் கோபத்திற்கு உள்ளாகி, யோசேப்பு இருந்த சிறையிலே தள்ளப்பட்டார்கள். யோசேப்புக்கு சிறை என்பது தேவன் உலாவுகிற இடமாகவும், தங்கும் இடமாகவும் இருந்தது. இந்த சிறையே யோசேப்புக்கு ஒரு பரலோகமாக மாறியது. காரணம் கர்த்தர் அவனோடே இருந்தார். அதனால் அந்த இக்கட்டில், உபத்திரவங்களில் மகிழ்ச்சியாய், சந்தோஷமாய் இருந்தான். அப்பொழுது ஒரு நாள் காலையில் ராஜாவின் கோபத்திற்கு உள்ளாகி, சிறையில் அடைக்கப்பட்ட அந்த இரண்டு பேரும் சோர்வோடும், கலக்கத்தோடும் அமர்ந்திருந்தார்கள். அவர்களைக் கண்ட யோசேப்பு நீங்கள் துக்க முகத்தோடு, கவலையோடு இருக்க காரணம் என்ன? என்ன நடந்தது? என்ன சம்பவித்தது? என்றான். அப்பொழுது தான் அவர்கள் கண்ட கனவை, சொப்பனத்தை யோசேப்புக்கு விவரித்தார்கள். அந்த சொப்பனத்துக்கு, கனவுக்கு யோசேப்பு சொன்ன அர்த்தம், இந்த மூன்று கூடையும், மூன்று நாட்கள். இன்னும் மூன்று நாட்களுக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, மீண்டும் அவருடைய ராஜ்யத்தில் உன்னை உயர்த்துவார் என்றார். யோசேப்பு சொன்னபடியே பார்வோன் ஒருவனை விடுதலையாக்கி, மூன்று நாளைக்குள் அவர் தலையை உயர்த்தி, அவர் சமுகத்தில் நிற்க வைத்தார். மூன்று நாளைக்குள் தேவன் சூழ்நிலைகள், வேதனைகள், அவமானங்கள் அத்தனையையும் மாற்றி அவனுக்கு ஒரு அற்புதத்தைச் செய்தவர் இன்றைக்கும் உயிரோடு



இருக்கிறார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே இன்றைக்கு உங்களுக்கும் தேவன் கட்டாயம் ஒரு அற்புதத்தைச் செய்வார், செய்ய முடியும், தோல்வியை மாற்ற முடியும், நிந்தையை மாற்ற முடியும், அவமானத்தை மாற்ற முடியும். ஆம் மூன்றுநாளைக்குள் பார்வோன் உன் தலையை உயர்த்தி மேன்மைப்படுத்துவார் என்று யோசேப்பு சொன்ன மங்கள வார்த்தையை தேவன் நிறைவேற்றினார்.


இன்றைக்கும் உயிரோடு இருக்கிற தேவன், உங்களுக்கு நீங்கள் எதிர்பார்க்கின்ற காரியங்களில் ஏதாவது ஒரு அற்புதத்தைச் செய்வார். தேவனுக்கு அதிகபடியாய் மூன்று நாட்கள் போதும். தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள் விருந்தும், மருந்தும் மூன்று நாட்கள் என்பார்கள். டாக்டர் மருந்து எழுதும் போது மூன்று நாட்கள் தான் எழுதுவார். உங்கள் வாழ்க்கையை சரி செய்ய, உங்கள் போராட்டத்திற்கு ஒரு முடிவு கட்ட மூன்று நாட்கள் போதும். அதைத்தான் யோசேப்பு தீர்க்கதரிசனமாக மூன்று நாளில் நீ தப்புவிக்கப்படுவாய், மூன்று நாளில் உன் தலை உயர்த்தப்படும் என்றார். இந்த செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே உங்கள் போராட்டம் என்ன? உங்கள் பிரச்சனை என்ன? நெடுநாட்கள் தாமதிக்கிறது, நீண்ட நாட்கள் பிரச்சனையாக இருக்கிறது கோர்ட் கேஸ், இந்த வியாதி போராட்டம், சொத்துப் பாகப்பிரிவினை முடிந்தபடியில்லை, இனி அதன்மேல்

எனக்கு நம்பிக்கை இல்லை என்று சோர்ந்து போனீர்களா? அவ்வளவுதான் என் வாழ்க்கையில் எல்லாம் முடிந்தது என்று நினைக்கின்றீர்களா? நீங்கள் தேவன் மேல் வைத்த உங்கள் நம்பிக்கை வீண் போகாது. உங்கள் பிரயாசம் வீண் போகாது. மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த தேவன் இன்றைக்கு உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார். உங்கள் போராட்டத்திற்கும், பிரச்சனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பார். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்றவர் கட்டாயம் உங்கள் காரியங்களில் ஒரு அற்புதத்தைச் செய்வார். **ஓசியா 6:2-ல் தீர்க்கதரிசி சொல்லுகிறார் இரண்டு நாட்களுக்குப் பின் அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார். அப்பொழுது நாம் அவருடைய சமூகத்தில் பிழைத்திருப்போம் என்றார்.** நீங்கள் பிழைத்திருக்கும்படி, வாழ்ந்திருக்கும்படி, உங்களுடைய இந்த சூழ்நிலை மாறும்படி மூன்றே நாளில் அற்புதம் செய்கிறவர், கட்டாயம் உங்களுக்கு ஒரு காரியத்தைச் செய்து, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்பதை நிரூபிப்பார். மூன்று நாட்களுக்குள் உங்கள் காரியத்தில் ஒரு அற்புதத்தைச் செய்வார். அதற்குத் தான் அவர் உயிரோடு இருக்கிறார். போகட்டும் இந்த மூன்று நாட்களை யார் யார் எப்படி பயன்படுத்திக் கொண்டார்கள், என்ன என்ன நன்மை நடந்தது என்பதைப் பார்ப்போம்.

## மூன்று நாட்கள் அவரோடு இருந்தார்கள்

பின்பு இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன். இவர்கள் என்னிடத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களை பட்டினியாய் அனுப்பி விட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்து போவார்களே என்றார். மூன்று நாளுக்குள் நமக்கு ஒரு காரியம், ஒரு அற்புதம் நடக்க வேண்டுமானால் நாம் அவரோடு மூன்று நாட்கள் இருக்க வேண்டும். காரணம் நாம் தேவனோடு இல்லாமல் கண் கண்ட போக்கில் போய், மனம் போன போக்கிலே போய், நாம் நம்முடைய இஷ்டத்திற்கு சுற்றித் திரிந்து கொண்டு தேவன் எனக்கு அற்புதம் செய்ய வேண்டுமென்றால் எப்படி செய்வார், எப்படி அற்புதம் நடக்கும்? நாம் அவரோடு இருக்க, அவரோடு சஞ்சரிக்க பழக வேண்டும்.

**2 நாளா 15:2-ல் நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால், அவர் உங்களுக்கு**



வெளிப்படுவார் என்றார். ஆம் மூன்று நாளைக்குள் தேவன் நம் தலையை உயர்த்த வேண்டுமென்றால் நாம் அடிக்கடி உபவாசித்து தேவ சமூகத்தில் கூட வேண்டும். உபா 16:16-ல் வருஷத்திலே மூன்று தரம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், உன் ஆண்மக்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள் என்றார்.

எந்த ஒரு ஆண்மகனும், கர்த்தருக்காக அர்ப்பணிக்கப்பட்ட எவரும், உபவாசத்தோடு தேவ சமூகத்திற்கு வரவேண்டும். இது தேவ சட்டம், இது தேவ நீதி, இதைச் செய்யாத யாவரும் தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்க முடியாது. இதைத்தான் இயேசுவின் நாட்களில் வனாந்தரத்தில், ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் ஜனங்கள் மூன்று நாட்கள் வனாந்தரத்தில் தேவனுடைய வார்த்தையை கேட்க கூடினார்கள். சாப்பாட்டை மறந்து, தூக்கத்தை மறந்து, தங்கள் வேலைகளை விட்டு, அவர் சமுகத்தில் கூடவும், ஜெபிக்கவும், அவர் சொல்லுவதைக் கேட்கவும் ஒருமனப்பட்டார்கள். ஆண்டவராகிய தேவன் ஒரு மனிதனிடத்தில் இதை-த்தான் எதிர்பார்க்கிறார். இயேசு சொன்னார் மத் 18:20-ல் ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் என்றார். இன்றைக்கு நமக்கு தேவவல்லமை வெளிப்பட வேண்டுமென்றால், நமக்கு வருகின்ற தீமைகள் நன்மையாய் மாற வேண்டுமென்றால், மூன்று நாளைக்குள் ஒரு மாற்றம் நிகழ வேண்டுமென்றால், அற்புதம் நடக்க வேண்டுமென்றால், மூன்று நாட்கள் அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்க வேண்டும், உபவாசித்து ஜெபிக்க வேண்டும். வேலையிலே பிரச்சனை இருக்கலாம், குடும்பத்திலே போராட்டம் இருக்கலாம், மற்ற மனிதர்களால் நமக்கு நெருக்கடி வரலாம், எத்தனை பிரச்சனை போராட்டம் வந்தாலும் தேவ சமுகத்தில் நாம் விழுந்து கிடக்கும் போது, உபவாசித்து ஜெபிக்கும் போது அந்த ஜெபம் பரலோகத்தின் தேவனை இந்த பூமியில் இறங்கி வரப்பண்ணும். **எஸ்தர் 4:16-ல் நீ போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம், இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன் என்றாள்.** ஆம் யூதருக்கு விரோதமாக ஆமான் என்பவன் ராஜாவினிடத்தில் சென்று யூதர்களுக்கு விரோதமாக பேசி, சட்டத்தை மாற்றி, கொடுமைபடு-த்தப்படவும், அழிக்கவும், பயங்கரமான கிரியை செய்ய ஆரம்பித்தான். யூதர்களை நாட்டை விட்டே, பூமியை விட்டே துரத்தி அழிக்க ஆமானும், அவனுடைய சகாக்களும் செயல்பட்டார்கள். ஆனால் எஸ்தரே, இந்த கெடு வைக்கப்பட்ட அந்த நாளிலே, மூன்று நாட்கள் அவளும், அவள் தாதிமார்களும், யூத ஜனங்களும் உபவாசித்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். புசியாமலும், குடியாமலும் தேவ சமூகத்தில் மூன்று நாட்கள் விழுந்து கிடந்தார்கள். இவர்கள் செய்த இந்த மூன்று நாட்கள் உபவாச ஜெபம் தேவ சமூகத்தை எட்டியது. தேவன் எஸ்தருக்கும், யூத குலத்திற்கும் இறங்கினார். நடந்தது என்ன? **எஸ்தர் 9:1 சொல்லுகிறது காரியம் மாறுதலாய் முடிந்தது.** பரலோகத்தின் தேவன் அவருடைய பிள்ளைகளுக்காக எழுந்தருளினார்.



தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப் போவார்கள் என்று சங் 68:1 சொல்லுகிறது. எப்பவுமே நம் எதிரி, நமக்கு கெடு வைக்கிறான், நாள் குறிக்கின்றான் என்றால், நமக்கு அல்ல, அவனுக்கு அவனே கெடு வைக்கிறான். அந்த மூன்று நாட்களின் ஜெபம், புசியாமலும், குடியாமலும் இருந்த அந்த உபவாச ஜெபம் ஒரு பெரிய மாற்றத்தை, அற்புதத்தைச் செய்தது. தேசத்தின் காரியங்களையே மாற்றிப் போட்டது. ஆம் நாம் மூன்று நாட்கள் அவரோடு இருக்கும் போது, மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபிக்கும் போது கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்கிறார். அப்பொழுது தான் அவர் சொன்ன வார்த்தை, தீர்க்கதரிசனம் நமக்கு நிறைவேறுகிறது. மூன்று நாட்களுக்குள் அவன் தலை உயர்த்தப்பட்டது.



தானியேல் 6:10-13 வசனங்களில் தானியேலோ வென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டிற்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.

தானியேல் மூன்று நாள் மட்டுமல்ல, தினமும் மூன்று வேளையும், காலை, மாலை, இரவு மூன்று நேரமும் ஜெப நேரமாக வைத்திருந்தான். ஒரு நாளைக்கு கிட்டதட்ட ஆறு மணி நேரம் ஜெபத்தில் தரித்திருந்தான். ஆறு மணி நேரம் ஓய்வு, 12 மணி நேரம் அரசு வேலையை செய்து தன் முழங்கால் ஜெபத்தால், தன் மூன்று வேலை ஜெபத்தால் முழு ராஜ்யத்தையும், ராஜாவையும் தன் கையில் வைத்திருந்தான். அந்த தேசத்தில் தானியேல் மூன்று வேளை ஜெபித்ததினால் அங்கே கிரியை செய்த ஆவிகள் கட்டப்பட்டு அழிக்கப்பட்டது, தேவ நாமம் உயர்த்தப்பட்டது. அவனுக்கு விரோதமாய் எழும்பினவர்கள் அழிக்கப்பட்டார்கள். தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்தது. காரணம் அவன் மூன்று வேளையும் ஜெபம் பண்ணி, பரிசுத்த ஆவியினால் நிரம்பி, மூன்று நாட்களை மூன்று நேரமாக மாற்றி தன் தேவனை தேசத்தில் நிருபித்தார். இன்றைக்கு நீங்களும் இப்படி செய்து பாருங்கள், மூன்று நாளைக்குள்ளே கர்த்தர் உங்களுக்கு ஒரு அற்புதத்தைச் செய்து, உங்கள் தலையை உயர்த்தி, முன்பைக் காட்டிலும், பெலத்யையும், சத்துவத்தையும் தந்து ஆசீர்வதித்து பெரிய காரியங்களைச் செய்வார்.

# மூன்று நாளைக்குள்ளே உங்களை எழுப்புவார்.


இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளுக்குள்ளே எழுப்புவேன் என்றார் யோவான் 2:19 நம்முடைய தேவன் மூன்றே நாளில் ஒருவனை உயிரோடு எழுப்ப முடியும். ஆகவே தான் யூதருக்கு சவால் விட்டு சொல்லுகிறார் என்னை கொன்று போடுங்கள், என்னை அழித்துப் போடுங்கள் மூன்றே நாளில் எழுப்புவேன், எழுந்திருப்பேன் என்றார்.

கீழ்ப்படியாத யோனாவை, தேவ சித்தத்தை நிறைவேற்றாத யோனாவை விழுங்கும்படி, உடைத்து உருவாக்கும்படி கர்த்தர் ஒரு பெரிய மீனுக்கு கட்டளையிட்டார். அது மூன்று நாட்களுக்கு அசை போடாமல் தேவன் கொடுத்த கட்டளையை நிறைவேற்றி, பத்திரமாய் தன் வயிற்றிலே யோனாவை பாதுகாத்து மூன்று நாட்கள் முடிந்தவுடனே அது அவனை தரையிலே கக்கிப் போட்டது. அந்த மீன் தண்ணீர் குடியாமல், புசியாமல் இருந்தபடியால், உபவாசித்தபடியால் யோனா பத்திரமாக அங்கே தேவனால் பாதுகாக்கப்பட்டு கரைக்கு திரும்பினார். பேதுருவைப் பாருங்கள் எல்லாரும் மறுதலித்தாலும் நான் மறுதலிக்க மாட்டேன் என்று இயேசுவுக்கு முன்பாக சவால் விட்டான். நடந்தது என்ன? கடைசியாக எல்லாரும் அமைதியாக இருந்தார்கள், பேதுரு மூன்று முறை மறுதலித்தான். அவரை தெரியாது என்று சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். கடைசியாக இருதயத்தில் குத்தப்பட்டு, உடைக்கப்பட்டு மூன்று முறை பாவ அறிக்கை செய்து நான் உம்மை நேசிக்கிறேன், நான் உம்மில் அன்பாயிருக்கிறேன் என்றான்.



மூன்றே நாளில் தேவன் அவருடைய வாழ்க்கையை கட்டியெழுப்பி, பின்வாங்குதலிருந்து உயிர்ப்பித்தார், மாற்றினார். அதைத்தான் வேதத்தில் நம்முடைய ஆண்டவராகிய தேவன் சொல்லுகிறார் **ஓசியா 6:1,2-ல் கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள், நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாட்களுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார், அப்பொழுது நாம் அவர் சமுகத்தில் பிழைத்திருப்போம் என்றார்.** சிலபேரை திருத்த, மாற்ற பல வருஷங்கள், பல மாதங்கள் ஆனது. யாக்கோபு 20 வருஷம் தேவனை மறந்து, தேவ திட்டத்தை நிறைவேற்றாமல் இருந்தார். சவுல் 40 வருஷம் தேவனுடைய திட்டத்திற்குள் வராமல் பரிதாபமாக மரித்துப் போனான். மூன்றே நிமிடத்தில் எசேக்கியாவின் ஜெபம் கேட்கப்பட்டு சுகமடைந்து ஆயுசு நாட்கள் கூட்டிக் கொடுக்கப்பட்டது. ஆனால் இயேசுவினுடைய சிலுவை பாடுகளுக்குப் பின்பு மூன்றே நாளில் மாற்றம் நடந்தது. மூன்றே நாளில் எழுப்புதல் உண்டானது. மூன்றே மணி நேரத்தில் வியாதிகள் சுகமடைந்தது. மூன்றே நாளில் அப்போஸ்தலனாகிய பவுல் சந்திக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டான். **அப் 9:9-ல் அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.** காரணம் தெற்கத்தி வெள்ளங்களை திருப்புவது போல தேவன் பவுலுடைய இருதயத்தை திருப்பினார். ஒரு மனிதன் மனதை மாற்றவும், உயிர்ப்பிக்கவும், அவருக்குள் எழுப்பவும் மூன்று நாள் போதும்.ஆகவே தான் இயேசு சொன்னார் இந்த ஆலயத்தை இடித்து விடுங்கள் மூன்றே

நாளில் எழுப்புவேன் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே நம் வாழ்க்கை எப்படியிருக்கிறது. நம்முடைய காரியங்கள் எப்படி இருக்கிறது எத்தனை வருஷங்கள், எத்தனை மாதங்கள் நாம் உழன்று, போராடிக் கொண்டிருக்கிறோம். மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் நான் உயிரோடிருக்கிறேன் என்றவர், இன்றைக்கு உங்கள் போராட்டத்திற்கும், உங்கள் பிரச்சனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி, ஒரு முடிவை உண்டு பண்ண விரும்புகிறார். அவரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. முடியாத காரியம் ஒன்றும் இருக்கப் போவதும் இல்லை. கட்டாயம் எழுப்பவும் அவரால் ஆகும். ஒருமுறை டாக்டர் பால் யாங்கிச் சோ என்ற தேவ மனிதர் தன் ஆலயத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த போது மயங்கி விழுந்து விட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சொன்னார்கள் அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள். அப்பொழுது போதகர் பால் யாங்கிச் சோ அவர்கள் சொன்னார்கள், எனக்கு மூன்று நாட்கள் வாய்ப்பு கொடுங்கள் பிறகு வந்து சொல்கிறேன் என்று அங்கிருந்து நேராக அவர் வைத்திருந்து ஓர் ஜெப மலையில் போய் மூன்று நாட்கள் ஜெபித்தார்கள். அந்த ஜெபம் முடிந்தவுடனே பரிசோதித்து பார்த்த போது எல்லா பெலவீனமும்,



உங்களுக்கு ஒரு அற்புதத்தை, விடுதலையைத் தருவார். மூன்று நாட்கள் அவர் சமுகத்தில் அவரோடு இருந்த ஜனங்களுக்கு அற்புதம் செய்தார். மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்த ஜனங்களுக்கு அற்புதம் செய்தவர் உங்களுக்கும் செய்வார். உங்களை பின் தொடருகிற பிசாசின் போராட்டங்கள், பிசாசின் கிரியைகளை மூன்று நாளைக்குள் ஒரு முடிவுக்கு கொண்டு வருவார். இயேசு சொன்னார் தன்னைக் கொல்ல, அழிக்கத் தேடிக் கொண்டிருந்த ஏரோதுவைப் பார்த்து லூக் 13:32,33-ல் அதற்கு இயேசு, நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி மூன்றாம் நாளில் நிறைவடைவேன் என்றார். பிசாசுகளைத் துரத்தவும், வியாதிகளை சுகமாக்கவும், மரித்துப் போனவர்களை உயிரோடு எல்லா வியாதியும் அவரை விட்டு முற்றிலும் நீங்கி இருந்தது. காரணம் தேவ சமுகத்தில் அவர் விழுந்து கிடந்து ஏறெடுத்த ஜெபங்கள் தான். மூன்றே நாளில் ஒரு மாற்றத்தை ஒரு அற்புதத்தை நடப்பித்தது. ஆம் நம் ஆண்டவராகி இயேசு கிறிஸ்து இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். அவர் அற்புதங்களைச் செய்கிறவர். ஆகவே தான் மூன்றே நாளில் ஒரு அற்புதத்தை செய்து உன் தலையை உயர்த்துவார் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்து, ஜெபிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே தேவன் வரும் நாட்களில் உங்களுக்கு மகிமையாக காரியங்களை செய்து உங்களை ஆசீர்வதித்து உங்கள் வாழ்வை கட்டியெழுப்பி, உங்களுக்கு மேன்மையான காரியங்களை தேவன் செய்வாராக.

செம்பட்டியில்

# இயேசுவின் பாதத்தில்

ஜூலை **07**

இரண்டாவது வெள்ளிக்கிழமை

@10:00Am

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

ஜூலை **8**

இரண்டாவது சனிக்கிழமை

@09:00AM




இடம்

**வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம், செம்பட்டி, திண்டுக்கல்**

வந்து பாருங்கள் !! இயேசு அற்புதம் செய்கிறார் !!

தொடர்புக்கு 94428 00449, 94428 00447



# நான் சொன்ன நல் வார்த்தையை நிறைவேற்றுவேன்

*சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். தேர்தல் நேரத்தில் எத்தனையோ வாக்குறுதிகளை போட்டியிடுகிறவர்கள் கொடுக்கிறார்கள். இதை நிறைவேற்றுவோம் என்கிறார்கள். திருமணத்திற்கு பல வீடுகளில் நிறைய வாக்குப்பண்ணுகிறார்கள். அப்படி உலகப்பிரகாரமாக நிறைய வாக்குப்பண்ணி அதை நிறைவேற்ற முடியாதவர்கள் உண்டு. ஆனால் நம் ஆண்டவர் வாக்குப்பண்ணினதை நிறைவேற்ற வல்லவர். எரே 33:14-ல் இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன் என்று சொல்லுகிறார். இன்னும் எரே 1:12-ல் என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்கிறார். எரே 29:10-ல் பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணும்படிக்கு, உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எழுபது வருஷம் சிறையிருப்பில் இருந்த தம் ஜனங்களைக் கர்த்தர் சந்தித்து, திரும்பி வரப்பண்ணி தமது நல் வார்த்தையை நிறைவேற்றினவர், நம்மிலும் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவார்.

## ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை எல்லாம் நிறைவேறிற்று

யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேலுக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் சொன்ன பகுதிகளை எல்லாம் பங்கிட்டு முடித்த போது, கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல் வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை எல்லாம் நிறைவேறிற்று என்று வாசிக்கிறோம். யோசுவா 21:45. மேலும் 43,44 வசனங்களில் இந்தப் பிரகாரமாகக் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தையெல்லாம் கொடுத்தார். அவர்கள் அவைகளைச் சுதந்தரித்துக் கொண்டு, அவைகளிலே குடியிருந்தார்கள். கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்டபடியெல்லாம், அவர்களைச் சுற்றிலும் யுத்தமில்லாமல் இளைப்பாறப் பண்ணினார். அவர்களுடைய எல்லாச் சத்துருக்களிலும் ஒருவரும் அவர்களுக்கு முன்பாக நிற்கவில்லை. அவர்கள் சத்துருக்களையெல்லாம் கர்த்தர் அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார். அவர்களுக்கு கொடுப்பேன் என்று சொன்ன எல்லா தேசங்களையும், அவர்களுக்கு கொடுத்தது போல, அவர்கள் அதை சுதந்தரித்துக் கொண்டு, அதிலே குடியிருந்தது போல நமக்கும் ஆண்டவர் எத்தனையோ விதமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். நாம் அத்தனை வாக்குத்தத்தங்களையும் சுதந்தரித்துக் கொள்ளுவோம், ஒரு வார்த்தையும் தவறிப் போகாது, எல்லாம் நிறைவேறும். அதுமட்டுமல்ல இஸ்ரவேலரைச் சுற்றி யுத்தமில்லாத ஒரு இளைப்பாறுதலை தந்த தேவன், சத்துருக்கள் கையில் நாம் ஒப்புக்கொடுக்கப்படாமல், அத்தனை சத்துருக்களையும் நம் கையில் ஒப்புக்கொடுப்பார். அவரது வார்த்தை ஒன்றும் தவறிப் போகாது, எல்லாம் நிறைவேறும். யோசுவா 23:14-ல் யோசுவா முதிர்வயதான போது இதோ, இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிற வழியே போகிறேன், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல் வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தாலும், உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக்கிறீர்கள். அவைகளெல்லாம் நிறைவேறிற்று, அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை என்று ஜனங்களை உற்சாகப்படுத்தினான். கர்த்தர் சொன்னதை நிறைவேற்றினார் என்று நினைவு கூர்ந்து பேசினான். இன்றைக்கு நம் வாழ்விலும் தேவன் சொன்ன எல்லா நல் வார்த்தைகளும் நிறைவேறிற்று, இன்னும் நிறைவேறப் போகிறது. அதற்காக நன்றியோடு நாம் நினைவு கூறுகிறவர்களாய் இருக்கிறோமா?

எலிசபெத்தும், மரியாளும் சந்தித்துக் கொண்ட போது எலிசபெத் கர்ப்பிணியாய் இருப்பது மரியாளுக்கு தேவதூதனால் தெரிவிக்கப்பட்டது. மரியாள் எலிசபெத்தை வாழ்த்தினாள். உடனே எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்த உடனே என் வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளிற்று என்று சொல்லி விட்டு லூக் 1:45-ல் விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள். நமது வாழ்விலும் கர்த்தரால் சொல்லப்பட்ட ஒவ்வொன்றும் நிறைவேறும் என்று நாமும் விசுவாசிப்போமானால், நம் வாழ்க்கையிலும் ஒவ்வொரு நல் வார்த்தையும் தவறிப் போகாமல் நிறைவேறும். ஆதி 26:3-ல் ஆண்டவர் ஈசாக்கினிடத்தில் இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு, நான் உன்னோடே கூட



இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன். நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன் என்று சொன்னார். ஈசாக்கு அப்படியே அந்த தேசத்தில் வாசம்பண்ணி விதை விதைத்தான் அந்த வருஷம் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான்.

அதைப் போல 1 இராஜா 8:56-ல் சாலமோன் கர்த்தரிடத்தில் ஜெபம் ஏறெடுத்து, ஜனத்தை ஆசீர்வதித்து, தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு சொன்ன அவருடைய நல் வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையாகிலும் தவறிப் போகவில்லை என்கிறான். யோசுவா, ஈசாக்கு சாலமோன் இவர்களிடம் என்ன வாக்குக் கொடுத்தாரோ அதை அப்படியே நிறைவேற்றினார். இஸ்ரவேலர் இறைச்சி கேட்டார்கள் ஆண்டவர் கொடுப்பேன் என்று சொல்லி விட்டார். அதுவும் ஒரு மாதம் வரைக்கும், தெவிட்டிப் போகும் வரை புசிப்பீர்கள் என்றார். மோசேக்கு இப்பொழுது சந்தோஷம் கொஞ்சம் எட்டிப் பார்க்கிறது. என்னோடு இருப்பவர்கள் ஆறு லட்சம் பேர், அதுவும் ஒரு மாதம் புசிக்க கொடுப்பேன் என்று சொல்லுகிறாரே, ஆடு மாடுகளை அடித்தாலும், சமுத்திரத்து மச்சங்களை சேர்த்தாலும் போதுமா என்றான். இப்படித்தான் ஆண்டவரை, அவருடைய வல்லமையை நாமும் மட்டுப்படுத்துகிறோம்.




எண் 11:23-ல் அதற்கு கர்த்தர் மோசேயை நோக்கி, கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ? நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்றார். அதன்படி காடைகள் இரண்டு புறமும், ஒரு நாள் பிரயாண தூரமும், இரண்டு முழ உயரமும் விழுந்து கிடந்தது. அதற்கு முன்னால் கர்த்தர் எழுபது பேர் மேல், மோசேயின் மேல் இருந்த ஆவியை வைத்தார். அந்த ஆவியின் நிறைவினால் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். பலமுமல்ல, பராக்கிரமுமல்ல என்னுடைய ஆவியினால் ஆகும் என்ற வார்த்தையின்படி ஆவியானவரால் நிரம்ப நிரம்ப இவ்வளவு தேவைக்கு என்ன செய்வோம்? எப்படி முடியும் என்ற புலம்பல்களுக்கு அற்புதங்கள் நடக்கும். அதனால் நம்மை நெருங்கி நிற்கிற பல பாடுகள் நடுவில் என்ன செய்யப் போகிறோம் என்று கலங்காதபடிக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நிரம்புங்கள். உங்கள் தேவைகள் அற்புதமாய் சந்திக்கப்படும். கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கும். அது ஒன்றும் தவறிப்போவதில்லை எல்லாம் நிறைவேறும். எசேக்கியா வியாதிப்பட்டு மரிக்கப் போகிறான் என்ற செய்தி கேட்டு மிகவும் அழுது, ஜெபம் பண்ணி பதினைந்து ஆண்டுகள் ஆயுசு காலத்தைப் பெற்றுக் கொண்டான். இதை ஆண்டவர் நிறைவேற்றுவதற்கு என்ன அடையாளம் என்று ஏசாயா தீர்க்கதரிசியிடம் கேட்டான். 2 இராஜா 20:9,10-ல் அதற்கு ஏசாயா, கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு கர்த்தரால் உனக்கு உண்டாகும் அடையாளமாக கடிகாரத்தின் முள் சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போக வேண்டுமோ, பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்ப வேண்டுமோ என்று கேட்டான். அதற்கு எசேக்கியா சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும் வேண்டும் என்றான். அதன்படி கர்த்தர் செய்து வார்த்தையை நிறைவேற்றினார். ஏசாயா 38:8-லும் இதையே வாசிக்கிறோம். தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வார் என்பதற்கு இது கர்த்தரால் உனக்கு அடையாளமாக இருக்கும் என்று சொல் என்றார். அப்படியே கடிகாரத்தில் இறங்கி இருந்த சூரிய சாயை பத்துப்பாகை பின்னிட்டு திரும்பிற்று. நம் வாழ்விலும் இயற்கைக்கு மேற்பட்ட, நடக்க முடியாத நன்மைகளை தேவனால் செய்ய முடியும், விசுவாசியுங்கள் எல்லாம் நிறைவேறும்.

# கர்த்தருடைய வார்த்தையின்படி செய்


ஆண்டவர் தம் வார்த்தையின்படியெல்லாம் செய்கிறவர் உண்மை தான், ஆனால் நாம் அவர் வார்த்தையின்படி செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். உபா 30:11-14 வரை வாசித்தால் நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறை பொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல, நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும் பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டு வருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல, நாங்கள் அதைக் கேட்டு அதின்படி செய்யும் பொருட்டு எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டு வருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலும் அல்ல, நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும், உன் இருதயத்திலும் இருக்கிறது. ஆண்டவரின் கட்டளை நமக்கு மறைபொருளோ, தூரமானதோ இல்லை, வானத்திலோ, சமுத்திரத்திலோ இல்லை. அது நமக்கு மிக அருகில் வாயிலும், இருதயத்திலும் இருக்கிறது. அதன்படி நாம் செய்ய வேண்டும்.



பிலேயாம் தீர்க்கதரிசியிடம் பாலாக் ராஜா நீ, எனக்காக வந்து இஸ்ரவேலை சபிக்க வேண்டும் என்று சில பிரபுக்களை அனுப்பி வரும்படி கேட்டான். கர்த்தர் அவர்களோடே போக வேண்டாம், அவர்களை சபிக்க வேண்டாம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார். அதை சொல்லி அனுப்பி விட்டான். ஆண்டவர் அனுமதிக்கவில்லை, நீங்கள் போய்விடுங்கள் என்றான். திரும்பவும் ஆள் அனுப்பி கேட்டுக் கொண்ட போது ஆண்டவரிடம் விசாரித்தான், எண் 22:20-ல் இரவிலே தேவன் பிலேயாமிடத்தில் வந்து, அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூடப் போ ஆனாலும் நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார். அதன் பிறகு பல சிட்சைகளுக்கு பின் பிலேயாம் கர்த்தர் அருளிய வார்த்தைகளை எடுத்துரைத்தான். 1 இராஜா 18:36-ல் அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து, ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்த காரியங்களை யெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும் என்று ஜெபித்தான். கர்த்தருடைய வார்த்தையின்படியே செய்த எலியா கர்த்தரை நிரூபித்தான். கர்த்தரை தெய்வம் என்று ஜனங்கள் குப்புற விழுந்தார் கள். பேதுருவின் வாழ்க்கையில் வெறும் வலைகளை அலசிக் கொண்டிருந்தான். இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு மீனும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான் லூக்கா 5:5-ல் வாசிக்கிறோம் ஏராளமான மீன்களைப் பிடித்தான்.

யாத் 23:22-31 வரை வாசித்தால் நீ அவர் வாக்கை நன்றாய் கேட்டு நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாகவும் இருப்பேன். என் தூதன் உன் முன் செல்வார், எதிரிகளை அதம்பண்ணுவேன், அவர்கள் தேவர்களை சேவியாமல், சிலைகளை உடைத்துப் போடு, உன் தேவனாகிய கர்த்தரை சேவி, அப்பத்தையும், தண்ணீரையும் ஆசீர்வதித்து, வியாதியை உன்னை விட்டு விலக்குவேன், மலடும், கர்ப்பம் விழுகிறதும் இல்லை. உன் ஆயுசு நாட்களை பூரணப்படுத்துவேன். எத்தனை ஆசீர்வாதங்களை நமக்கு வைத்திருக்கிறார். நாம் அவர் வார்த்தையின்படி செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போம்.

மரியாள் தன் வாழ்க்கையில் தேவதூதன் மூலமாய் அறிவிக்கப்பட்ட வாழ்த்துதலின்படி, வார்த்தையின்படி நடக்க முடியுமா? என்ற மனநிலை இருந்தாலும், உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது என்று அர்ப்பணித்ததால் உலகத்தின் இரட்சகராக இயேசு வெளிப்பட்டார். வார்த்தையின்படி செய்யவும், வார்த்தையை நிறைவேற்றவும் நம்மை அர்ப்பணிப்போமானால் மிகப் பெரிய நன்மைகளைப் பெற முடியும். அதுமட்டுமல்ல தேவனுடைய மனுஷன், ஊழியக்காரன் சொன்னதை கேட்டுச் செய்தவர்களும் உண்டு. எலியாவின் நாட்களில் ஏற்பட்ட பஞ்சத்தின் விளைவாக, எலியாவை போஷிக்க சாரிபாத் விதவை வீட்டிற்கு தேவன் அனுப்பினார். அவளிடத்தில் அப்பம் கொண்டு வர எலியா கேட்கிறார். அவள் தன் இயலாமையைச் சொல்லுகிறாள். கொஞ்சம் மாவு, கொஞ்சம் எண்ணெய் இருக்கிறது. அதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். எவ்வளவு கடைசியான நிலை, எலியா பயப்படாதே! நீ போய் அதை ஆயத்தப்படுத்து முதலாவது ஒரு சிறிய அடையை செய்து என்னிடத்தில் கொண்டு வா, பின்பு உனக்கும், உன் குமாரனுக்கும் பண்ணலாம். தேசத்தில் மழை வரும் வரை எண்ணெயும் மாவும் குறைந்து போவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றதும், 1 இராஜா 17:15-ல் அவள் போய் எலியாவின் சொற்படி செய்தால், அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை.





எத்தனை ஆசீர்வாதம். தேவனுக்கும், தேவ மனிதர்களுக்கும் கொடுக்கும் போது அவர்கள் மூலம் தேவன் சொன்ன வார்த்தையை கனம் பண்ணும் போதும் எவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டாள். நாகமான் என்ற சீரிய தளபதி. குஷ்டம் அவன் சரீரத்தில் இருந்ததால் குணமாக்க இஸ்ரவேலில் உள்ள தீர்க்கதரிசியிடம் போனான். சுகமாவான் என்ற செய்தியை ஒரு சிறு பெண்ணின் வழியாய் கேட்டு வந்தான். எலிசா யோர்தானில் ஏழு தரம் ஸ்நானம் பண்ணு என்ற போது கடுங்கோபம் கொண்டான். எங்கள் தேசத்திலே எத்தனை நதிகள் உண்டு, என்னைத் தொட்டு குணமாக்குவார் என்று எண்ணினேன் என்றான்.

ஆனால் பிறகு கீழ்ப்படிந்து 2 ராஜா 5:14-ல் யோர்தானில் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே ஏழு தரம் முழ்கிய போது அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி அவன் சுத்தமானான். தேவனுடைய மனுஷன், எலிசாவின் வார்த்தையைக் கேட்டு கீழ்ப்படிந்து சுகத்தைப் பெற்றான்.

சூனேம் ஊரில் கனம் பொருந்திய ஸ்திரி, எலிசா தன் ஊருக்கு வரும் போதெல்லாம், தன் வீட்டில் ஏற்றுக் கொண்டு, அவள் வீட்டில் தன் புருஷனின் அனுமதியோடு, வருகிற தேவ மனுஷன் பரிசுத்தவான் என்று காண்கிறேன். மேல் மாடியில் ஒரு சிறிய அறையை கட்டி, ஒரு மேஜை, கட்டில் நாற்காலி, குத்து விளக்கு வைத்து தங்க வைப்போம் என்றாள். அதன்படி எலிசா தங்கியிருக்கும் போது அவளுடைய குறையை விசாரித்து குழந்தை இல்லை என்று அறிந்து, உனக்கு குழந்தை கிடைக்கும் என்று சொன்னார். அதன்படி ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு திடீர் என்று தலை நோகுகிறது என்று சொன்னவன். மரித்து விட்டான். இதை அவள் பார்த்து எலிசாவை அழைத்து வந்து, உயிர் பெறச் செய்து பெற்றுக் கொண்டாள் என்று 2 இராஜா 4-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எலிசா தான் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயை நோக்கி, நீ உன் வீட்டிற்குப் புறப்பட்டுப் போய் எங்கேயாவது சஞ்சரி, கர்த்தர் தேசத்தில் பஞ்சத்தை வருவிப்பார். அது ஏழு வருஷம் இருக்கும் என்றான்.

2 இராஜா 8:1,2-ல் அந்த ஸ்திரி எழுந்து தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படி செய்து, தன் வீட்டாரோடு கூட புறப்பட்டு பெலிஸ்தரின் தேசத்தில் போய் சஞ்சரித்தாள். பஞ்சம் முடிந்ததும் அவள் திரும்ப வந்து, தன் வயல், வீடு இவைகளை திரும்பப் பெற ராஜாவிடம் முறையிட வருகிறாள். அந்த நேரத்தில் எலிசாவின் வேலைக்காரன் கேயாசியிடம் ராஜா, எலிசா செய்த அதிசயங்களைக் குறித்து விசாரித்தான். இறந்த பிள்ளையை உயிர்ப்பித்தான் என்று சொல்லும் போது, அவளைப் பார்த்து அவன், இவள் தான் என்றான். நம் தேவன் அற்புதர். அவள் தன் வீட்டிற்காக முறையிட வருகிற அந்த நேரத்தில் சரியாக ராஜா விசாரித்துக் கொண்டிருந்தான், அவளும் ராஜாவிடம் விவரித்துச் சொன்னாள். 2 இராஜா 8:6-ல் ராஜா அவளுக்கு ஒரு பிரதானியை கட்டளையிட்டு, அவள் இந்த தேசத்தை விட்டுப் போன நாள் முதல் இதுவரைக்கும் உண்டான வருமானம் அனைத்தையும் அவளுக்குக் கிடைக்கும்படி செய் என்றான். எத்தனை ஆச்சரியம் தேவ மனுஷனுடைய வார்த்தையின்படி செய்த அவளுக்கு, எதையும் இழந்து போகாமல், திரும்ப கிடைக்க செய்த தேவன் நமக்கும் செய்வார். தேவ மனுஷன் வார்த்தையின்படி செய்த அவளுக்கே அப்பம் கிடைத்தால், தேவனுடைய வார்த்தையின்படி செய்கிற நமக்கு நாம் இழந்த, பறிகொடுத்த எல்லாவற்றையும் திரும்ப கிடைக்கச் செய்வது எவ்வளவு நிச்சயம். அவர் நமக்கு சொன்ன எல்லா நல் வார்த்தைகளையும் நிறைவேற்றுவார். நாம், அவர் நமக்குச் சொன்ன எல்லா வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிந்து செய்ய நம்மை அர்ப்பணிப்போம்!.





# நீங்களும் இயேசுவை கூட்டிக் கொண்டுபோங்கள்

சகோதரி. பிரேமாடேவிட்

**பயப்படவும், திகைக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார். உபா 31:6**

எப்போதும் நம்மோடு கூடவே இருக்கிறவரும், வருகிறவருமாகிய நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசுவுக்கும் தனக்கும் சம்பந்தமில்லாத வாழ்க்கை வாழ்ந்த கிறிஸ்தவ வாலிபன் ஒருவன் இயேசுவை தன் உள்ளத்தில் இரட்சகராக ஏற்றுக்கொண்டு இயேசுவோடு, இயேசுவின் பிள்ளையாக இந்த உலகத்தில் நடக்கத் துவங்கினான். இனிமையாய், சாட்சியாய் போய்க் கொண்டிருந்த அவன், உலகத்தின் போக்கின்படி போகத் தொடங்கினான். இந்நிலையில் அவன் ஒரு ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது இந்த உலகத்தில் நீ பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிற காரியத்தை விட்டு விட்டு வா, நான் உன்னை பயன்படுத்துவேன் என்று ஆண்டவர் தெளிவாய் அவனோடு பேசினார். ஆனால் அவனோ என்னாலயெல்லாம் அதை விடமுடியாது ஆண்டவரே, இந்த பழக்கத்தை என்னால விடமுடியாது என்றான். ஆண்டவருடைய பலத்தினாலும், உதவியினாலும் அதை அவனை விட வைத்தார். அந்த காரியம் அவனை விட்டு விலகிப் போனது. மறுநாளே ஆண்டவர் அவனுக்கு ஒரு ஊழியத்தைக் கொடுத்தார். அவங்க ஊருல இருக்கிற இரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அங்கு வருகிற, போகிற Train-ல உள்ளவர்களுக்கு கைபிரதி ஊழியம் செய்தார். ஏற்கனவே இந்த மாதிரி ஊழியம் செய்யும் ஒரு சகோதரனோடு சேர்ந்து முதல் நாள் ஊழியம் செய்தாயிற்று. இரண்டாம் நாள் அந்த சகோதரன் தம்பி ஊழியத்திற்குப் போகலாமா? என்று கேட்டதற்கு சரிங்க அண்ணன் என்றான். இந்த வாலிபனிடம் அந்த சகோதரன், தம்பி இன்றைக்கு என்னால்

வர முடியாது என்றார். அந்த வாலிபன் நான் மட்டும் தனியே போகனுமா? என்று கேட்டதற்கு, அந்த சகோதரன் நீ தனியாக போக வேண்டியதில்லை வேணும்னா இயேசுவை கூட்டிட்டுப் போங்க என்று சொன்னவுடன் ஒரு நிமிடம் திகைத்து நின்றான். அன்றைய தினம் அவன் இயேசுவை கூட்டிக் கொண்டு ஊழியத்திற்குப் போனான். இரயில்வே **Police** அந்த தம்பி கைபிரதி கொடுப்பதைப் பார்த்து, இது அரசாங்கத்திற்கு சொந்தமான இடம், நீ ஜங்சனுக்கு வெளியே போய் கொடு, இங்கே வரக் கூடாது என்று எச்சரித்தார்கள். ஆண்டவர் போ என்று சொன்னதால் எதிர்ப்புகள், அடி, உதை அனைத்தையும் ஆண்டவருக்காக சகித்தார். 10 வருஷங்களுக்கு மேலாக பல நாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். நீங்க வேணும்னா இயேசுவை கூட்டிட்டுப் போங்க என்ற வார்த்தையின் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு இயேசுவோடு, இயேசுவைக் கூட்டிக் கொண்டு சென்றதால் இன்று மகிமையான சாட்சியாய் இருக்கிறார். இந்த செய்தியை வாசிக்கும் அருமையான தம்பி, தங்கையே உங்கள் வாழ்க்கையில், நீங்கள் தனியே நிற்பது போல உணருகிறீர்களா? அல்லது படிப்பு, வேலை, திருமணம், ஊழியத்தினி மித்தம் பெற்றோரைப் பிரிந்து தனியே இருக்கிறேன் என்ற பயமோ, கலக்கமோ அல்லது உங்களை எதிர்ப்போர், அதிகாரிகளால் சொல்லப்பட்டவைகள் வேதனைப்படுத்துகிறதா? நீங்கள் வேணும்னா இயேசுவைக் கூட்டிட்டுப் போங்க எல்லாம் சரியாகும், அவர் பார்த்துக் கொள்வார். உங்கள் மூலம் அவரின் நாமம் நிச்சயம் மகிமைப்படும். நீங்களும் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும், எல்லையிலும் உயர்வைக் காண்பீர்கள். சுகமாய் வாழுவீர்கள். மற்றவர்களும் உங்களால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.




வேதத்தில் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து, கர்த்தர் காண்பித்த கானான் தேசத்திற்கு அழைத்து வந்த தலைவர் மோசே மரித்த பின்பு, அவரின் ஊழியர் யோசுவா அவரது ஸ்தானத்தில், அவரது பொறுப்பை ஏற்கும் நேரத்தில் தான் ஆண்டவர் அவரைப் பார்த்துச் சொல்கிறார் நான் மோசேயோடு இருந்தது போல, உன்னோடு இருப்பேன். நான் உனக்குக் கட்டளையிட வில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார், வருகிறார் என்றார். யோசுவா 1:5,9 உபா 31:1-8. தன்னோடு ஆண்டவர் பேசின வார்த்தைகளின் மேல் நம்பிக்கை வைத்து யோசுவா தனியாய் அல்ல ஆண்டவரையும் கூட்டிக் கொண்டு போனார். கரைபுரண்டோடும் யோர்தான் ஆற்றின் நடுவே உலர்ந்த தரை வழியாய் நடப்பது போல யோசுவாவும், ஜனங்களும், நடந்து சென்றனர். கர்த்தர் கூடவே இருந்து தண்ணீரைக் கடக்கச் செய்தார். மிகப்பழமையான எரிகோ நகரைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கோட்டைச் சுவர் மிகவும்

அகலமானது. எதிரிகள் உள்ளே நுழைய முடியாதபடிக்கு பாதுகாப்பானது. இந்த நகரத்தை யாராலும் கைப்பற்றவோ, அசைக்கவோ, தகர்க்கவோ முடியாது என்றிருந்த நேரத்தில், இஸ்ரவேலருக்கு அவர்கள் வழியை அடைத்துக் கொண்டதாலும், அடைக்கப்பட்டதிலும் ஆண்டவரே வழியை திறக்க முடியும் என்று இஸ்ரவேலருக்கு கற்றுக் கொடுப்பதற்காகவும் எரிகோவை ஏழுநாள் சுற்றி வரச்செய்து, ஏழாம் நாளில் ஏழுமுறை அமைதியாய் சுற்றி வந்து, கடைசி முறையில் ஆர்ப்பரிக்க வேண்டும் என்று கர்த்தர் கூடவே இருந்து ஆலோசனை சொல்லி நடத்தினார். எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது. ஆயி பட்டணத்தின் தோல்வியிலிருந்து எப்படி மறுபடியும் வெற்றி பெறுவது என்று, ஆண்டவரின் திட்டங்களை, யுக்திகளை அறிந்து கொண்டு வெற்றி பெற்றார்கள். இப்படி இன்னும் பல காரியங்களில் இஸ்ரவேலர் எல்லார் கண்களுக்கு முன்பாகவும் செய்து யோசுவாவை தேவன் மேன்மைப் படுத்தினார். உங்களோடும் கூட இருந்து தேவன் உங்களை மேன்மைப்படுத்துவார். அருமையாய்,சிறப்பாய் அவருடைய பொறுப்பை யோசுவா நிறைவேற்ற ஆண்டவர் துணையாயிருந்தார்.

நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய் அக்கினி ஜீவாலை உன் பேரில் பற்றாது

ஏசாயா 43:2 என்று சொன்ன தேவனை நம்பி யோசுவா, அந்த தேவனையே தனக்குத் துணையாகக் கூட்டிக் கொண்டு போனது போல, நீங்களும், உங்களால் செய்ய முடிந்த சின்ன வேலைகளானாலும், செய்ய முடியாத பெரிய வேலைகளானாலும், ஆவிக்குரிய முயற்சிகளோ, உலக வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கும், ஆசீர்வாதத்திற்குமான, எதற்காயிருந்தாலும் இயேசப்பா என்னோட வாங்கப்பா, எனக்கு உதவி செய்யுங்க, நான் படிக்கப் போறேன், ஜெபிக்கப் போறேன், அந்த அதிகாரியை சந்திக்கப் போகிறேன் என்று ஒவ்வொன்றிற்கும் மனதிலோ, முழங்கால் படியிட்டோ ஜெபித்துப் பாருங்கள் ஜெயம் ஜெயம் தான். தானியேல் பெற்றோரை விட்டுப் பிரிந்து அடிமையாய் பாபிலோனிலிருந்த போது தினமும் தேவனோடு தான், தேவனைக் கூட்டிக் கொண்டே தான் நடந்திருப்பார். ஒருநாள் தானியேலை சிங்கக்குகையில் போட்டபோது தேவனே என்னோடு சிங்கக் கெபிக்கு வாங்க என்று தான் சொல்லியிருப்பார். சர்வ வல்லவர் அங்கு சென்ற போது சிங்கங்களின் வாய் கட்டப்பட்டது. அதே போலத்தான் தானியேலின் நண்பர்களை அக்கினிச் சூளையில் போடும் போது ஆண்டவரே எப்போதும் எங்களோடு கூட இருக்கிறவரே, யேகோவா ஷம்மா எங்களோடு வாங்க என்று சொல்லியிருப்பார்கள். அதன்படியே ஆண்டவர் முதல் நபராக, நான்காம் நபராக சூளைக்கு வெளியே நின்றவர்களுக்குக் காணப்பட்டார். எந்த சேதமும் இல்லாமல் தானியேலும், நண்பர்களும் காக்கப்பட்டார்கள். அந்த தேச-த்திலே அவர்கள் உயர்த்தப்பட்டது மாத்திரமல்ல அவர்களின் தேவனே ஜீவனுள்ள தேவன் என்று தேவனின் நாமம் உயர்த்தப்பட்டது. யோசுவாவின் தேவன், தானியேலின் தேவன், நம் தேவன், உங்கள் தேவன் அவரே உங்களோடு இருப்பவர், வருகிறவர். இது முதல் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திற்காகவும், இந்த கல்வியாண்டிலும், இயேசுவை கூட்டிக் கொண்டு போங்கள். கர்த்தர் தாமே வந்து உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக!.





# லெமன் வித் ஸ்பூன்

## Lemon with spoon



ஷாலினியின் பள்ளியில் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாவட்ட கலெக்டர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். ஆசிரியர்களும், மாணவர்களும் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர். 4-ஆம் வகுப்புக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாயின. லெமன் வித் ஸ்பூனில், லெமன் வைத்த ஸ்பூனை வாயில் வைத்தபடி யார் முதலாவது வருகிறார்களோ அவர்களுக்கே பரிசு. இது எல்லோருக்கும் தெரியும், ஆனாலும் ராணி டீச்சர் மறுபடியும் மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லி விளையாட்டை ஆரம்பித்தார்கள். ராஜா, ராம், ஷாலினி, காவ்யா நான்கு பேர் இந்த விளையாட்டில் பங்கு பெற்றார்கள். முதல் சுற்று, இரண்டாம் சுற்றில் ராஜாவும், ஷாலினியும் வெற்றி பெற்றார்கள். மூன்றாம் சுற்றில் யார்? வெற்றி பெற்று முதல் பரிசைப் பெறப் போகிறார்களோ என்று எல்லோரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். சில பேர் ராஜா என்று கத்தினார்கள். வேறு சிலர் ஷாலினி என்று கத்தினார்கள்.

ஷாலினியை முந்தி சென்று கொண்டிருந்த ராஜா எல்லைக் கோட்டை தொடப் போகிற நேரத்தில் ராஜாவின் லெமன் கீழே விழுந்து விட்டது. ஷாலினி லெமனோடு எல்லைக் கோட்டைக் கடந்தாள். ஷாலினியே போட்டியில் வெற்றி பெற்று பரிசைப் பெற்றாள்.

குட்டி பிள்ளைகளே இந்த போட்டியில் லெமனையும் கீழே போட்டு விடக்கூடாது, அதே நேரம் முதலாவதும் ஓடி வர வேண்டும் என்பதே கண்டிஷன்.அதே போலத்தான் இந்த பூமியில் நம்ம ஒவ்வொருத்தரும் ஏதோ பிறந்தோம், எப்படியாவது வாழலாம் என்ற தவறான எண்ணங்களை, தீய பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு இயேசப்பாவுக்கு பிடிச்சதை செய்து, அவர் பிள்ளையாக வாழ வேண்டும், நடக்க வேண்டும் என்பதே நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. இயேசப்பாவுக்கு பிடிச்ச மாதிரி நாம் வாழும் போது பரலோகத்திலும், இந்த பூமியிலும் நமக்கு பலன் கிடைக்கும். நீங்களும் நல்ல வெற்றியுள்ள பிள்ளையாக நடக்க இயேசப்பாவிடம் உதவி கேளுங்கள். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உதவி செய்தவர் உங்களுக்கும் உதவி செய்வார்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா இந்தப் பூமியில் இருக்கிற கெட்ட, தீய காரியங்களை வெறுத்து, உங்க பிள்ளையாக, நல்ல வெற்றியுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்யுங்க, நன்றி இயேசப்பா. இயேசுவின் நாமத்தில் ஆமென்.



## மனப்பாட வசனம்

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
2 தீமோத் 4:7



இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

📍 இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site

**MANAGER - MEDIA OPERATIONS**

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid

**GRAPHIC DESIGNER**

Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid

**CONTENT WRITER**

Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site

**PROGRAM PRODUCER / DIRECTOR**

Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid

**VIDEO EDITOR**

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site

**SOUND ENGINEEER**

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid

**MOTION GRAPHICS DESIGNER**

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site

**CAMERAMAN**

Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site

**PHOTOGRAPHER**

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/

OR

Email : connect@dprince.in

OR

Whatsapp : +91 7825 04 7825

OR

Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

“என் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகள் ”

# “என் பிள்ளைகள்” ஆசீர்வாத ஜெப திட்டம்





- உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்
- உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க.
- அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற.
- இன்றே இணைந்திடுங்கள் !
  (வயது வரம்பு 24 வரை)

**உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.**

**இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள் 94428 00449, 94428 00447**

**WHATSAPP மூலம் இணைய 94980 00449**

இணையதளம் மூலமாக இணைந்திட jesuslives.in/resources

# நடப்பு செய்திகள்

# பெற்றோர்களே...

விரல் நுனிக்குள் விஞ்ஞானம் வந்தமர்கிற காலத்தில், நாம் பிள்ளைகளை வளர்த்து வருகிறோம். புறக்கூண்டைப் போல தனித்தனி குடும்பங்களாக பலர் வசித்து வருகின்றனர். சமீபமாக சிங்கிள் பேரெண்ட் என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் கம்பீரமும் அதிகரித்து வருகிறது. அதெல்லாமே உங்களுடைய பெர்சனல்... அதற்குள் எட்டிப் பார்ப்பது அநாகரிகம். ஆனால், அடுத்த தலைமுறையை சரியாய் வளர்ப்போம். டோரா புஜ்ஜியோ... வர்றான் பூச்சாண்டி பாட்டோ... குழந்தைகளிடம் மொபைலைக் கொடுத்து, சாப்பாடு ஊட்டாதீர்கள். செல்போனால் குழந்தைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். குழந்தைகள் சாப்பிடுவதற்கு, ஏதாவது ஒன்றுக்கு அடம்பிடித்தால் சமாதானப்படுத்த முந்தைய காலத்தில் விளையாட்டுப் பொருட்களை காட்டியும், வீட்டின் வெளியே அழைத்து சென்று வேடிக்கை காட்டுவதும் வழக்கம். இப்போது செல்போன்களை கையில் கொடுத்து கெடுக்கின்றனர். அதில் குழந்தைகள் யூடியூப்பை பயன்படுத்தி, பொம்மை படங்கள் பார்ப்பது, கேம் விளையாடுவது என முழு செல்போனையும் பயன்படுத்தி, அதிலுள்ள நுட்பங்களை கரைத்துக்குடித்து விடுகின்றனர். இவ்வாறு நாட்கள் செல்ல செல்ல குழந்தைகள் தாங்களாகவே வீட்டிலிருந்து செல்போனை எடுத்து பயன்படுத்த தொடங்கி விடுகின்றனர். அதனால் ஏற்படும் பாதிப்புகள் என்னவென்று யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. இந்தியாவை பொறுத்தவரை சுமார் 73 சதவீத குழந்தைகள் செல்போனை பயன்படுத்தி வருவதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் மனநோய் மற்றும் கண் பாதிப்புகளுக்கு உள்ளாவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. அதிக நேரம் செல்போன் பயன்படுத்தும் குழந்தைகளுக்கு கிட்டப்பார்வை, மாறு கண், மனச்சோர்வு, பயம், கவலை மற்றும் எரிச்சல் உணர்வு போன்ற மனரீதியான பிரச்னைகள் அதிகரித்து உள்ளதாகவும், ஆன்லைன் கேம், யூடியூப் வீடியோ, சமூக வலைதளங்கள் என அதிக நேரம் குழந்தைகள் செல்போனில் செலவிடுவதால் குழந்தைகளின் மனநிலை பாதிக்கப்படுவதுடன் அவர்கள் இயல்பாக யாரிடமும் பேசுவதில்லை எனவும் ஆய்வுகள் தெரிவிக்கிறது. இந்தியாவை தவிர்த்து சில நாடுகளில் செல்போன் மோகம் படிப்படியாக குறைந்து விட்டதாகவும், அதிலும் குறிப்பாக அமெரிக்காவில் 32 சதவீத குழந்தைகள் மட்டுமே செல்போன்களை பயன்படுத்துகின்றனர் என கூறப்படுகிறது. எனவே பெற்றோர்கள், குழந்தைகளை செல்போன்களை பயன்படுத்தாமல் பார்த்துக் கொள்வதோடு, அவர்களுடன் எப்போதும் நேரத்தை செலவிட்டு ஆரோக்கியமாக வளர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**ஜெபம்**

உலகம் முழுவதும் உள்ள சிறுபிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, படிப்பிற்காக, பாதுகாப்பிற்காக, சரீரசுகத்திற்காக, அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேறவும், அதை தடை செய்து பிள்ளைகளை அழிக்க நினைக்கிற சாத்தானின் சூழ்ச்சிகள் நிர்மூலமாக ஜெபிப்போம்.



# இயேசுவை நம்பினோர் பெற்ற நன்மைகள் சில

சாட்சி பகுதி

**சகோதரி. ரோஸ் - ரெட்டியபட்டி திண்டுக்கல்**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம், கர்த்தருடைய கிருபையினால் என்னுடைய பதிமூன்றாம் வயதில் இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டேன். எங்கள் முழு குடும்பமும் இன்று கர்த்தருக்குள் ஜீவிக்கிறோம் என்றால் இயேசு வாழ்கிறார் ஊழியத்தை இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் ஆரம்பித்ததின் மூலம் தான். என்னுடைய வாழ்க்கையில் கர்த்தர் எனக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். எனக்கு 2004-ல் திருமணம் ஆகி மூன்று வருடம் குழந்தை இல்லாமல் இருந்தேன். என்னுடைய முழு குடும்பத்திற்கு தெரியாது, நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு மருத்துவர்கள் என்னை பரிசோதித்து விட்டு உனக்கு இருக்கிற சில பிரச்சனைகளால், உனக்கு குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்று சொல்லி விட்டார்கள். ஒரு குழந்தையை தத்து எடுத்து கொள்ளுங்கள், நீங்கள் வயதாகும்போது வருத்தப்படுவீர்கள் என்று மருத்துவர்கள் ஆலோசனை சொன்னார்கள். மருத்துவர்கள் கொடுத்த சில சத்து மாத்திரைகளை வாங்கிக் கொண்டு கண்ணீருடன் வெளியே வந்தோம். நான் என் கணவரிடம் நாம் ஜெபம் செய்வோம் கர்த்தர் நமக்கு குழந்தையை தருவார், அவர் தராவிட்டாலும் தொடர்ந்து நாம் அவரையே சேவிப்போம் என்று சொல்லிவிட்டு, மாத்திரைகளை தூக்கி எறிந்து விட்டு வீட்டிற்கு வந்தோம். தொடர்ந்து நம்பிக்கையோடு கர்த்தரிடத்தில் ஜெபித்தோம், அதன் விளைவாக மூன்று வருடம் கழித்து சாமுவேலைக் கொடுத்தார். இரண்டாவது குழந்தையைப் பற்றி அநேகர் கேட்கும்போது வெளியே சொல்ல முடியாமல் மனதிற்கு நினைத்து வருத்தப்படுவேன். ஊழியக்கார சகோதரர் எனக்கு ஆலோசனை கொடுத்தார்கள். அவங்க கர்த்தரிடத்தில் இப்படி கேள் நான் மலடி என்று செல்லாதபடி பிள்ளையை கொடுத்தீங்க, இன்னொரு குழந்தையையும் தாங்க என்று கர்த்தரிடத்தில் கேள் என்றார்கள். நான் அப்படி கர்த்தரிடத்தில ஜெபித்த போது ஜாய் தெபொராவை இரண்டாவது குழந்தையாக தேவன் கொடுத்து இருக்கிறார். மலடி என்னப்பட்ட எனக்கு தேவன் இரண்டு குழந்தைகளை கொடுத்து ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார்.

**சகோதரி. ஜேனட் முத்தழகுபட்டி - திண்டுக்கல்**

என் இரண்டாவது மகன் இறந்தபோது மனம் உடைந்து காணப்பட்டேன், சொந்தங்கள் எனக்கு பக்கத்தில் இல்லாவிட்டாலும், நான் வானத்தின் வாசலில் வந்து சகோதரர், சகோதரியிடம் ஜெபம் செய்துவிட்டு செல்லுவேன்.எனக்கு கருத்தடை ஆப்ரேஷன் பண்ணிவிட்டேன், அதன் பிறகு குழந்தைக்கு வாய்ப்பு இல்லை. அநேக மருத்துவர்கள் உனக்கு குழந்தை பிறக்காது என்றார்கள், உன் கர்ப்பபையை எடுத்து விட வேண்டும் இல்லாவிட்டால் நீயும் இறந்து விடுவாய் என்றார்கள்.மனவேதனையோடு உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டேன். சகோதரர் அவர்கள் குழந்தை இல்லாதவர்கள் முன்பாக வாங்க, வெட்கப்படாதீங்க உங்களுக்காக ஜெபிக்க போகிறேன் என்றார்கள். நானும் முன்பாக சென்று ஜெபித்தேன். மூன்றே மாதத்தில் நான் மீண்டும் கர்ப்பமாக தேவன் கிருபை செய்தார். நான் வானத்தின் வாசலில் வந்து ஜெபித்து விட்டு சென்ற பிறகு தேவன்எனக்கு ரூபா பிளஸ்ஸி என்ற பெண் குழந்தையை தந்து என்னை சாட்சியாக நிறுத்தினார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.


ஆசீர்வாதமான கோவை
உபவாச ஜெபம்
ஜீலை
1
காலை 10.00
2.00 வரை
Bro. L. Vincentraj
Sis. Kala Vincent Raj
இடம்
YMCA ஹால், தலைமை தபால்
நிலையம் அருகில், கோவை
தொடர்புக்கு – 90879 89149


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில்
எழுப்புதல்
உபவாச
ஜெபம்
ஜீலை
15
சனிக்கிழமை
9:00am
இடம்
இயேசு அழைக்கிறார்
ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம்,
PRC Depot
அருகில், மதுரை
SIS.KALA VINCENTRAJ
BRO.L.VINCENTRAJ
தொடர்புக்கு 94428 00449, 94428 00447

# ONE SOUL AT A TIME

## ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா

**1**
**மணித்துளி**
**ஆத்துமா**
**ரூபாய்**



இந்த உன்னதமான சுவிசேஷ ஊழிய
திட்டத்தில் எங்களோடு
இணைந்து சுவிசேஷ ஒளியை
பரவச்செய்யுங்கள்!

ஒவ்வொரு
மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்றால்
ஒரு மாதத்திற்கு 744 மணிநேரம்.

-Gpay

இணையதளம்
மூலமாக தாங்கிட

மாதத்திற்கு
1000, 2000, 5000, 10,000
ஆத்துமாக்களை
தாங்கிட முன் வாருங்கள்!!

மாதந்தோறும் உங்களால் முடிந்த
காணிக்கைகளை கொடுத்து இந்த
கடைசிக்கால சுவிசேஷ பணியை
தாங்க முன்வாருங்கள்!

jesuslives.in/donate



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Jesus Lives MINISTRIES

LIVE

# நம்பிக்கையின் இரவு

# NIGHT OF HOPE



## புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்

**ஜூன் 30**

இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்

அனுப்ப வேண்டிய எண்
**944 28 00 449**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது

செம்பட்டியில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்



Fr. Berchmans

Bro. L. Vincentraj

Sis. Kala Vincent Raj

**ஆகஸ்ட்**

# 15

அரசு விடுமுறை

செவ்வாய்க்கிழமை

@09:00Am

**இடம்**

வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல்

வந்து பாருங்கள் !!
இயேசு அற்புதம் செய்கிறார் !!

தொடர்புக்கு
94428 00449, 94980 00449